பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்துவது எதிர்கால வேலேவாய்ப்புக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்குமல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதுபற்றிய முழு விவரக் குறிப்பு கிடைக்கவில்லை.

சென்னேப் பல்கலேக் கழகம் இதற்காக ஒரு குழுவை அமைத்து ஆராயும்படி செய்திருக்கிருர்கள். பாலிடெக்னிக்கில் இந்த முறை நல்ல பலன் அளிக்கக் கூடியதாக இருப்பதால் பொறியியல் கல்லூரியிலும் மேலேநாடுகளில் உள்ளதுபோல இந்த முறையை நன்கு பரிசிலித்து நடைமுறைக்குக் கொண்டுவந்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்றே கருதப்படுகிறது. 1972-73-லாவது ஒன்றிரண்டு கல்லூரிகளில் இதைப் பரிட்சார்த்தமாகக் கொண்டு வரும் வகையில் இதுபற்றி இந்தக் குழுவினர் பரிசிலனே செய்வார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் இந்தக் குழுவினர் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

Teaching of Telugu in schools in Rajapalayam

* 42 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been made by the Hon. Sri Subba Raja, a former Member of this House on the teaching of Telugu in Rajapalayam Educational Institutions about 10th April 1970; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பகுதி நேர தெலுங்கு பண்டிதர் ஒருவரை எஸ்.எஸ். அரசு (கழக) உயர்நிலேப்பள்ளியில் நியமித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are about 350 students who want to study Telugu in the High School at Rajapalayam. Before the introduction of the two-language scheme, they were getting tuition in Telugu in addition to Tamil during the school hours. I have made representation with regard to this matter, and also Thiru Subba Raja, a former Member of this House and the Chairman of the Rajapalayam Municipality. The qualified Telugu teacher was then transferred to some other work and has not been re-posted here. Now arrangements have been made it is said to teach Telugu after school hours and only a salary of Rs. 30 has been fixed for a Telugu Pandit. How can a Telugu Pandit work for Rs. 30? I have also received a letter that the Telugu Pandit has to retire in the month of July or so. So, may I request the Hon. Minister for Education whether he will take steps to transfer the Telugu Pandit to that school with reasonable pay and provide for the teaching of Telugu there?

1972 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவு மாணவர்கள் இருப்பார்களானால் தனியாகவே ஒரு ஆசிரியரைப் போடலாம் என்பதாக அரசு உத்தரவிட்டிருக்கிறது. தெலுங்கு ஆசிரியருக்கு நிர்ணயித்துள்ள சம்பளத்தை அதிகப் படுத்தவேண்டும் என்பதற்கும் பள்ளி கல்வி இயக்குநர் சிபாரிசு செய்துள்ளார். விரைவில் அதற்கான அனுமதியும் அளிக்கப்படும். இதற்குள் தெலுங்கு ஆசிரியர் நியமிக்கப்பட்டிருப்பார் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

பள்ளி மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை

*43 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக்கூட மாணவர்களுக்கு கட்டாய வைத்திய பரிசோதனை கொண்டு வரும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தற்பொழுது எல்லாப் பள்ளி மாணவர்களுக்கும் கட்டாய வைத்தியப் பரி சோதனை கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை. அவ்வாறு கட்டாயமாகச் செய்ய இயலாவிடினும், எந்த வகையில் செய்யமுடியும் என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்ற ஆரம்பப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளாவது இந்த மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவார்களா ? சிறு வயதிலேயே வியாதி இன்னதென்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அந்தக் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கை பாதிக்கப்படாதவாறு தடுத்துவிட முடியும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மாணவர்கள் 5 வயது முதல் 10 வயதிற்குள் இருப்பவர்கள் மருத்துவப் பரிசோதனைத் திட்டம் இப்போது 12 ப்ளாக்குகளில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களின் மூலம் செயல்படுகிறது. மேலும் 6 ப்ளாக்குகளுக்கு விரிவுபடுத்த மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலைக் கேட்டிருக்கிறோம். அது தவிர சென்னை நகரத்தில் எல்லா மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவது என்று யோசிக்கிறபோது மிகப் பெரிய செலவுடைய திட்டமாக இது அமைகிற காரணத்தினால் சிறிது யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் ஐயாயிரம் மாணவர்களுக்கு ஒரு பைலட் திட்டத்தை சென்னை நகரத்தில் 'a pilot project for 5,000 school children' என்பதாக செயல்படுத்த இருக்கிறோம். ஏறத்தாழ ஒரு கோடி மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் அத்தனை பேர்களையும் வைத்தியப் பரிசோதனைக்கு